இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

**வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்**

(துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு)

# விலைமனுக்கோரல் (IFB)

## புத்தளம் துறைமுக நங்கூரமிடலிலிருந்து படகு மூலமான நிலக்கரி போக்குவரத்து சேவைக்காக வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து கொள்வதற்கான சர்வதேச போட்டிமுறையிலான விலைமனுக்கோரல் 2021/22 மற்றும் 2022/23

புத்தளம் துறைமுக நங்கூரத்திலிருந்து புத்தளம் லக்விஜய அனல்மின் நிலையத்திற்கு படகு மூலமாக நிலக்கரி போக்குவரத்து சேவையை வழங்குவதற்காக வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்துடன் (CSC இணைந்து கொள்வதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சின் (SSCAPC) கொள்முதல் குழுத் தலைவரினால் தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

இந்த சேவைக்காக இலங்கையின் சிலோன் நிலக்கரி (பிரைவேட்) லிமிடெட்இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்திற்கு (CSC) ஒப்பந்தத்தை வழங்கியுள்ளதுடன், இந்த சேவையை இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்திற்கு துணை ஒப்பந்தம் செய்ய விரும்புகிறது, சுயமாக இயக்கப்படும் விசைப்படகு உரிமையாளர் மற்றும் மூன்றாம் தரப்பினருக்கு இச்சேவையினை செயற்படுத்துவதற்காக துணை ஒப்பந்தம் செய்ய திட்டமிட்டுள்ளது.

1. இந்த ஒப்பந்தத்தின் படி படகு மூலமாக ஆண்டுக்கான போக்குவரத்து நிலக்கரியின் மொத்த தொகையின் அளவு 2,360,000 மெட்ரிக் +/- 10% ஆக காணப்படும். மழைக்கால கடல் நிலைமை காரணமாக இந்த நடவடிக்கை **செப்டெம்பர் நடுப்பகுதியிலிருந்து** அடுத்த வருடம் **மே நடுப்பகுதி** வரையிலான காலப்பகுதிக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சேவையின் நோக்கம் பெரிய கப்பல்களிலிருந்து சுயமாக இயக்கப்படும் பெட்டிகள் மற்றும் பெரிய கப்பலை சுத்தம் செய்தல் போன்றவையும் அடங்கும்.

2. **2021/22** ஆண்டுக்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் **2021 செப்டம்பர் 15 ஆம் திகதி** ஆரம்பிக்கப்படுவதுடன் இலங்கை அரசினால் வெளியிட்டுள்ள கோவிட்-19 இன் சுகாதார வழிகாட்டுதல்களுக்கு இணங்க, கப்பல் குழு மற்றும் ஏற்றி இறக்கு-பவர்களுடன் அனைத்து விசைப்படகுகளும் முன்கூட்டியே வர வேண்டும்.

3. சேவை தொடர்பான விரிவான விளக்கங்கள் மற்றும் தொடர்புடைய ஏனைய விபரங்களுடன் மனு ஆவணங்களை **வரையறுக்க-ப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம், இல-27, MICH கட்டிடம், சேர் ராஸீக் ப்.்ரீட் மாவத்தை (பிரிஸ்டல் வீதி) கொழும்பு 00100** எனும் முகவரியில் மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் இணையதளத்தில் **(www.cscl.lk)** இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

4. இருப்பினும், மனுக்களை சமர்ப்பிபதற்காக மனுதாரர் 2021.07.08 ஆந் திகதி முதல் 2021.07.29 ஆந் திகதிவரை வேலைநாட்களில் **மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 மணி** வரை (இலங்கை நேரப்படி) மேற்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் மீள்செலுத்தப்படாத கட்டணமாக ரூ.100,000 + வெட் வரியுடன் செலுத்தி மற்றும் எழுத்துபூர்வ விண்ணப்பத்தினை சமர்பித்து மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்

5. வங்கி உத்தரவாதத்தின் வடிவில் பெற்றுக்கொள்ளப்பட்ட மனுக்காப்புறுதியுடன் **"படகு மூலமான நிலக்கரி போக்குவரத்து சேவைக்காக விலைமனுக்கோரல் 2021/22 மற்றும் 2022/23"** எனக் குறிப்பிட்டு முத்திரையிடப்பட்ட மனுக்களை **2021.07.30 ஆம் திகதி 1400 மணிக்கு** (இலங்கை நேரப்படி) முன்னர் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

   **தலைவர்**
   **அமைச்சினால் நியமிக்கப்பட்ட நிலையான கொளமுதல் குழு,**
   **துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு,**
   **சைத்திய வீதி,**
   **கொழும்பு 00100,**
   **இலங்கை**

மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமாக கிடைக்கப்பெறும் மனுக்கள் நிராகரிக்கப்படும்.

6. இந்த கொள்முதல் 1987 இலக்கம் 03 ஒப்பந்த சட்டத்தின் விதிகளுக்கு பொருந்தும்.

7. முன்மனுக் கூட்ட தொலைப்பேசி கலந்துரையாடல் **2021.07.19 ஆந் திகதி இலங்கை நேரப்படி பிற்பகல் 1.00 மணி முதல் 3.00 மணி** வரை நடைபெறும்

8. ஆர்முள்ள மனுதாரர் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள சி.எஸ்.சி.யின் உதவி பொது முகாமையாளர் கப்பல் மற்றும் முகவரி பிரிவு வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் (தொலைபேசி: +94 11 2 436 819, கைத்தொலைபேசி +94 71 0 215 702, தொலைநகல் +94 11 2447547, மின்னஞ்சல் : **dantha@cscl.lk)**

**தலைவர்**
**அமைச்சினால் நியமிக்கப்பட்ட நிலையான கொளமுதல் குழு,**
**துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு,**
**கொழும்பு 00100.**
**இலங்கை**